# சொல்லதிகாரம்

## கிளவியாக்கம்

### சொல்வகை

#### உயர்திணையும் அஃறிணையும்

484 **உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே;**
**ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.**

மக்கள் என்று சுட்டப்படுபவரை உயர்திணை என்று கூறுவர். அவர்கள் அல்லாத பிறவற்றை அஃறிணை என்று கூறுவர். அவ்விரு திணைகளாகச் சொற்கள் பொருளுணர்த்தும்.

### பால்

#### உயர்திணைக்குரிய மூன்று பால்கள்

485 **ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்**
**பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி**
**அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.**

ஆணை அறியும் சொல்லும் பெண்ணை அறியும் சொல்லும் பலரை அறியும் சொல்லொடு பொருந்தி, அம் மூன்று பாலுணர்த்தும் சொற்கள் உயர்திணைப்பாற்படும்.

#### அஃறிணைக்குரிய இரண்டு பால்கள்

486 **ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று**
**ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே.**

ஒன்றைச் சுட்டி அறியும் சொல், பலவற்றைச் சுட்டி அறியும் சொல் என்று, அவ் இருபாலையும் உணர்த்தும் சொற்கள் அஃறிணைப்பாற்படும்.

### 'பேடி' என்னும் பெயரும் தெய்வம் சுட்டிய பெயர்களும் உயர்திணையாய் அடங்குதல்

**487 பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும்அந் தந்தமக் கிலவே**
**உயர்திணை மருங்கின் பால்பிரிந்து இசைக்கும்.**

உயர்திணையில் ஆண்மை திரிந்து பெண்மையைச் சுட்டிக் கூறும் பெயர்ச் சொல்லும் (பேடி), தெய்வத்தைச் சுட்டிக் கூறும் பெயர்ச்சொற்களும் அவை இவை என அறிதற்கான விகுதியை உடையன அல்ல. அதனால் அவை உயர்திணை ஈறுகளையே பெற்று, அம் முப்பால்களிலுமாகப் பிரிந்து வழங்கும். பேடி வந்தாள், பெருமாள் எழுந்தருளினன், திரு வந்தாள், சிவபெருமான் அருளினன்.

### சொற்களைப் பால் அடையாளம் காட்டும் ஈறுகள்
### ஆண்பாற் சொற்களின் ஈறு

**488 னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்.**

னகர ஒற்று ஈற்றுறுப்பாய் அமைவன ஆடூஉவைக் குறிக்கும் சொற்கள். அவன், கரியன், உண்டான்.

### பெண்பாற்சொற்களின் ஈறு

**489 ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்.**

ளகர ஒற்று ஈற்றுறுப்பாய் அமைவன மகடூஉவைக் குறிக்கும் சொற்கள். அவள், செய்யாள், உண்டாள்.

### பலர்பாற் சொற்களின் ஈறு

**490 ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்**
**மாரைக் கிளவி உளப்பட மூன்றும்**
**நேரத் தோன்றும் பலரறி சொல்லே.**

பலர்பால் சொற்கள் ரகர ஒற்றையும் பகரத்தையும் மார் என்னும் இடைச்சொல்லையும் இறுதியில் பெறும். அவர், வெள்ளையர், உண்டார், என்ப, உண்ப, தாய்மார், அண்ணன்மார்.

**அஃறிணை ஒன்றன்பாற் சொற்களின் ஈறு**

**491 ஒன்றறி கிளவி த ற ட ஊர்ந்த**
**குன்றிய லுகரத்து இறுதி யாகும்.**

அஃறிணையுள் ஒன்றன்பால் த ற டக்களை ஊர்ந்த குற்றியலுகரத்து ஈறாகும். து, று, டு எனும் இறுதி நிலையில் முடிவனவே ஒன்றன்பாற் சொற்களாகும். வந்தது, போயிற்று, குறுந்தாட்டு (குட்டையான தாள்களையுடையது) 'பேரமர்க் கட்டு' - கண்களையுடையது. (குறள் 1083)

**அஃறிணைப் பலவின்பாற் சொற்களின் ஈறு**

**492 அ ஆ வ என வரூஉம் இறுதி**
**அப்பால் மூன்றே பலவறி சொல்லே.**

அ ஆ வ இறுதிகளையுடைய மூன்றும் அஃறிணையில் பலவின்பால் ஆகும். வந்தன, ஊர்வன, கரிய. பார்ப்புகள் பறவா, அவை நடைபெறா, உண்குவ, வருகுவ.

**முற்கூறிய பதினோர் ஈறுகளும் வினைச் சொற்களில் விளங்கித் தோன்றுதல்**

**493 இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய**
**ஈற்றில்நின்று இசைக்கும் பதினோ ரெழுத்தும்**
**தோற்றந் தாமே வினையொடு வருமே.**

ஈற்றில் நின்றுஉணர்த்தும் முற்சுட்டிய பதினோரெழுத்தும், வினைச் சொற்களில் அமைந்து நன்கு புலப்படும். ன, ள; ர, ப, மார்; து, று, டு; அ, ஆ வ என்று அவை முறையே முன்னர்க் கூறப்பட்டன. இவை பெயரிலும் தோன்றுமாயினும் அங்கு மயக்கத்திற்கிடமுண்டு. எனவே வினையில் தெளிவாகப் புலப்படும் என்றார்.

### திணை, பால் இயைபு

**494 வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.**

வினையின்கண் பாலைச் சுட்டும் இடைச் சொற்களும் பெயரின்கண் பாலைச் சுட்டும் இடைச் சொற்களும் தம்முள் வேறுபட்டு மயங்குதல் கூடா; தத்தமக்கு ஒத்தனவே பொருந்தி வருதல் வேண்டும். பால் அறி கிளவி - பதினோர் ஈறுகள். இவை வினைக்கும் பெயருக்கும் ஒரு தொடரில் அவையவையே வரவேண்டும்; மயங்கி மாறிவரல் கூடாது. அவன் வந்தது, அது வந்தாள் என வாரா. பால் வழுவாமை கூறவே, திணை இடம் காலம் மரபு முதலியன யாவும் மயங்குதல் கூடாது என்பதும் பெறப்படும்.

### பேடி எனும் சொல் ஆண்பால் ஈற்று வினைச்சொல்லுடன் இயைபு படாமை

**495 ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே.**

முன்பு கூறியவாறு ஆண்மை திரிந்து, பெண்தன்மை மிக்குச் சுட்டிக் கூறும் சொல் (487) ஆண்பால் வினைமுற்றுச் சொற்களால் முடிவு பெறாது.பேடி வந்தான் என வாராது.

### உரையாடல் பற்றிய இலக்கணம் செப்பும் வினாவும்

**496 செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்.**

இந்நூற்பாமுதல் உரையாடல் வாக்கியங்கள் பற்றிக் கூறப்படுகிறது. ஒருவர் தம் கருத்தை வெளிப்படுத்தும் செப்பும். அவ்வாறே ஒருவர் பிறர் கருத்தறிய வினவும் வினாவும் ஆகியவற்றை வழுவாமல் போற்றிப் பேசுக.

செப்பை முற்படக்கூறக் காரணம் வினாவிற்கு விடையாக மட்டுமன்றித் தனியே கருத்தை வெளிப்படுத்தவும் செப்புதல் உண்டு என்பதனாலேயாம்.

## உ.வேற்றுமையியல்

### வேற்றுமை வகை ஏழு

546 **வேற்றுமை தாமே ஏழெனமொழிப.**

வேற்றுமை ஏழாகும்.

### எட்டாம் வேற்றுமை

547 **விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே.**

விளிவேற்றுமையோடு கூட்ட வேற்றுமை எட்டாகும்.

### வேற்றுமை : பெயரும் வரிசையும்

548 **அவைதாம்,**
**பெயர், ஐ ஒடு கு**
**இன்அது கண்விளி என்னும் ஈற்ற.**

அவை பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளிவேற்றுமை என்பன. ஈற்ற - வகைமையின.

### முதல் வேற்றுமை
### எழுவாய் வேற்றுமை, பெயர் வேற்றுமை

549 **அவற்றுள்**
**எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.**

அவற்றுள் எழுவாய் வேற்றுமை என்பது, பெயர் மட்டும் வெளிப்பட்டு நிற்கும்: வேறுஉருபில்லை.

### எழுவாய் ஏற்கும் பயனிலைகள்

550 **பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்**
**வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்**
**பண்புகொள வருதல் பெயர்கொள வருதல்என்று**
**அன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே.**

பெயர் எனப்பட்ட எழுவாய் வேற்றுமையின்

பயனிலைகள்: பொருளிதுவெனக்கூறல், ஏவல், வினை கொள்ளுதல், வினவுதல், பண்புணர்த்துதல், பெயரைப் பயனிலையாகக்கொள்ளுதல் என்ற அறுவகை. அவ்வாறான அனைத்தும் பயனிலையாக வரும். மரம் உளது. மகனே வா. மாடு மேய்கிறது. அது யாது. காடு கரிது. அவன் முருகன்.

### பெயர்த்தொகைகளும் பயனிலையும்

**551 பெயரி னாகிய தொகையுமாருளவே**
**அவ்வும் உரிய அப்பாலான.**

ஒரு பெயர் மட்டுமன்றிப் பெயர்பல தொடர்ந்து தொகைச் சொற்களாய் நிற்பனவுமுள. அவையும் எழுவாய் வேற்றுமையாய் பயனிலை கொண்டு முடியும். பெயரினாகிய தொகை: பனைமரம், மதிமுகம், சோழன் நலங்கிள்ளி, பல்யாக சாலை முதுகுடுமிப்பெருவழுதி. இவை பெயர்பல தொடர்ந்து, ஒரே பொருளைக் குறிப்பன.

### எழுவாயும் தோன்றா எழுவாயும்

**552 எவ்வயின் பெயரும் வெளிப்படத் தோன்றி**
**அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.**

தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய அனைத்து இடப்பெயர்களும், வெளிப்படத்தோன்றி நின்று. அவ்வாறு பயனிலை பெற்று நிற்றல் அவற்றிற்குச் செவ்விதாகும். வெளிப்படத் தோன்றிநிற்றல் செவ்விது என்பதால் - தோன்றா எழுவாயும் உண்டு என்பதாம். 'சாத்தா உண்டாயா' என்றவிடத்து 'உண்டேன்' என்ற மறுமொழியில் யான் எனும் எழுவாய் வெளிப்படத் தோன்றவில்லை.

### பெயரும் உருபும் பயனிலை கோடல்

**553 கூறிய முறையின் உருபுநிலை திரியாது**
**ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப.**

முன்பு புணரியலுள் வேற்றுமை உருபுகள் இவை

யெனவும் (113) பெயருக்குப்பின் வேற்றுமையுருபுகள் நிற்குமெனவும் (116) கூறினார். உருபுகள் தம் நிலை திரியாமல் பெயர்களுக்கு இறுதியில் நின்று பயனிலை கொள்ளும். முருகனை, முருகனுக்கு.

**பெயர் காலம் காட்டாமை**

**554 பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா**
**தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே.**

பெயராக நிற்கும் எழுவாய் வேற்றுமைச் சொற்கள் காலம் காட்டா. வினையாலணையும் பெயர் மட்டும் காலம் காட்டும். உண்டவன் போனான்.

**இரண்டாம் வேற்றுமை : ஐவேற்றுமையும் பொருளும்**

**555 இரண்டா குவதே.**
**ஐஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;**
**எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு**
**அவ்விரு முதலின் தோன்றும் அதுவே.**

இரண்டாம் வேற்றுமை ஐ வேற்றுமையாகும். அது வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டின் நிலைக் களத்தில் தோன்றும். கருத்தா வினை செய்கிறது. அது எழுவாய் வேற்றுமை. அவ் வினை சென்று சேருமிடம், செயற்படுமிடம் செயப்படு பொருளாகும். எனவே ஐ வேற்றுமைப்பொருள் செயப்படுபொருள். பந்தை அடித்தான் - வினை; பொன்னை உடையான் - குறிப்புவினை.

**ஐ வேற்றுமைப் பொருட் பாகுபாடுகள்**

**556 காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்**
**ஒப்பின் புகழின் பழியின் என்றா**
**பெறலின் இழவின் காதலின் வெகுளியின்**
**செறலின் உவத்தலின் கற்பின் என்றா**
**அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின்**
**பிரித்தலின்**

# 5. பெயரியல்

**சொல்லும் பொருளும்**

**640 எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.**

சொற்கள் அனைத்தும் பொருள் குறித்து வருவனவே.

**சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல்**

**641 பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லின் ஆகும் என்மனார் புலவர்.**

சொல்லுணர்த்தும் பொருளின் தன்மையை அறிதலும் அச்சொல்லின் தன்மையையே அறிதலும் சொல்லினாலாகும். 'சான்றோர்' எனல் பொருண்மை தெரிதல். அச்சொல் உயர்திணைப் பலர்பால் என அறிதல் சொன்மை தெரிதல்: பொருண்மை. சொன்மை என்பன சொல்லின் இரு பண்புகள்.

**சொல் வெளிப்படையாகவும் குறிப்பாகவும்**
**பொருளுணர்த்துதல்**

**642 தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்**
**இருபாற் றென்ப பொருண்மை நிலையே.**

சொல்லினால் தனித்ததொரு பொருளை விளக்கி நிற்றலும் சொல்லினால் மட்டுமன்றிச் சூழலால் குறிப்புப் பொருளைத் தோற்றுவித்தலும் என இரண்டாகும். 'நீ மிகவும் பெரியவன்' என்பதன் நேர்பொருள் வேறு; அதுவே எள்ளல் என்னும் குறிப்புப் பொருளும் தருகிறது.

**சொற்களின் பாகுபாடு**
**பெயரும் வினையும்**

**643 சொல்லெனப் படுப பெயரே வினை என்று**
**ஆயிரண்டென்ப அறிந்திசி னோரே.**

'சொல்' பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என இருவகையாகும். பெயர் பொருளைக் குறிக்கும்; வினை அப் பொருளின் புடைபெயர்ச்சியைக் குறிக்கும்.

### இடையும் உரியும்

**644 இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப.**

இடைச்சொல் என்னும் சொல்லும் உரிச்சொல் என்னும் சொல்லும் முற்கூறிய பெயர்வினைகளைச் சார்ந்து, அவற்றை இடமாகக் கொண்டு தோன்றும்.

### திணை அடிப்படைப் பெயர்கள்

**645 அவற்றுள்,**
**பெயர்எனப் படுபவை தெரியுங் காலை**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கும்ஓ ரன்ன உரிமையும்**
**அம்மூ உருவின தோன்ற லாறே.**

பெயர்ச்சொல் உயர்திணைக்குரிமையுடையவும் அஃறிணைக்குரிமையுடையவும் அவ்விரண்டு திணைக்கும் பொது உரிமையுடையவும் என மூன்று வடிவினை யுடையவாம்.

### ஐம்பால் உணர்த்தும் பெயர்கள்

**646 இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்**
**உரியவை உரிய பெயர்வயி னான.**

வினைச்சொற்கள் தத்தம் ஈறுகளால் இருதிணை ஐம்பாலை உணர்த்தும். பெயர்ச்சொற்கள் பல அங்ஙனம் இருதிணை, ஐம்பாலாய்ப் பிரிந்து பொருளுணர்த்தவல்லன. அவன் அவள் அவர் அது அவை என்பவை இருதிணை ஐம்பாலை உணர்த்தவுரியன. நம்பி, பெண்டாட்டி, முள்ளி என்பன இகர ஈறு பெற்று ஆண்பால் பெண்பால் அஃறிணை ஒன்றன்பால் எனத் தத்தமது பொருள் மூலமே திணை, பால் உணர்த்துகின்றன.

### உயர்திணைப் பெயர்வகை
### ஒரு சார்பு பற்றியன

**647 அவ்வழி,**
**அவன் இவன் உவன்என வரூஉம் பெயரும்**
**அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்**
**அவர்இவர் உவர்என வரூஉம் பெயரும்**
**யான்யாம் நாம்என வரூஉம் பெயரும்**
**யாவன் யாவள் யாவர் என்னும்**
**ஆவயின் மூன்றோடு அப்பதி னைந்தும்**
**பால்அறி வந்த உயர்திணைப் பெயரே.**

அவன் இவன் உவன், அவள் இவள் உவள், அவர் இவர் உவர், யான் யாம் நாம், யாவன் யாவள் யாவர், இப் பதினைந்து பெயர்களும் ஆண், பெண், பலர் என்னும் மூன்று பாலினையும் உணர்த்தும் உயர்திணைப் பெயர்களாகும்.

### உயர்திணைப் பெயர்வகை
### பிறிதொரு சார்பு பற்றியன

**648 ஆண்மை அடுத்த மகன்என் கிளவியும்**
**பெண்மை அடுத்த மகள்என் கிளவியும்**
**பெண்மை அடுத்த இகர இறுதியும்**
**நம்ஊர்ந்து வரூஉம் இகர ஐ காரமும்**
**முறைமை கட்டா மகனும் மகளும்**
**மாந்தர் மக்கள் என்னும் பெயரும்**
**ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும்**
**சுட்டுமுத லாகிய அன்னும் ஆனும்**
**அவைமுத லாகிய பெண்டுஎன் கிளவியும்**
**ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ**
**அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன.**

'ஆண்மகன்', 'பெண்மகள்', 'பெண்டாட்டி', நம்பி நங்கை, மகன்-மகள், மாந்தர்-மக்கள், ஆடூஉ-மகடூஉ அன்னன்-அன்னான், அன்னள்-அன்னாள், கண்ணன்னன்

## 6. வினையியல்

### வினைச்சொல்லின் இலக்கணம்

683 **வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.**

வினைச்சொல் வேற்றுமை ஏற்காது; காலங் காட்டும். உண்டான், பார்க்கிறான், தருவான்.

### வினைச்சொல் காட்டும் காலவகை

684 **காலந் தாமே மூன்றுஎன மொழிப.**

'காலம்' மூன்று கூறுபடும்.

### வினைச்சொல்
### காலங்காட்டும் முறை

685 **இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா**
**அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்**
**மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.**

வினைச்சொற்கள் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர் காலம் என மூன்று காலங்களையும் வெளிப்படக் காட்டும்; குறிப்பாகவும் காலங்காட்டும். கண்டான், காண்கிறான், காண்பான். குறிப்பு வினைகள் - நல்லவன், கரியன், பொன்னன். 'அவன் பொன்னன்'என்றால் 'பொன்னனாய் உள்ளான்' எனக் குறிப்பாக நிகழ்காலம் காட்டும்.

### வினைச்சொல் வகை

686 **குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றும்**
**காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்**
**உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்**
**அம்மூ வுருபின தோன்ற லாறே.**

தெரிநிலை குறிப்பு வினையாகத் தோன்றிக் காலம் காட்டும் வினைச்சொற்கள் எல்லாம் உயர்திணைக்குரியனவும்

அஃறிணைக் குரியனவும், அவ்விருதிணைக்கும் பொதுவானவையும் என மூவகையினவாகும். பார்த்தான்-உயர்திணை, பார்த்தது-அஃறிணை, பார்க்கும்-பொது (அது பார்க்கும், அவன் பார்க்கும்).

**உயர்திணைத் தெரிநிலை வினை**
**தன்மைப்பன்மை**

**687 அவைதாம்,**
**அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்**
**உம்மொடு வரூஉம் க ட த ற என்னும்**
**அந்நாற் கிளவியோடு ஆயெண் கிளவியும்**
**பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே.**

அம் ஆம் எம் ஏம் என்னும் இடைச்சொற்களும், இறுதியில் உம்மையொடு வரும் க ட த ற வாகிய கும் டும் தும் றும் என்னும் அந்நான்கு இடைச்சொற்களும் ஆகிய எட்டு ஈற்றுச்சொற்கள் தன்மைப்பன்மையை உணர்த்தும் உயர்திணை வினைச்சொற்களாம். உண்டனம், வரைந்தாம், கண்டனெம், சென்றேம், உண்கும், காண்டும், வருதும், சேறும்.

**தன்மை ஒருமை**

**688 க ட த ற என்னும்,**
**அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமொடு**
**என்ஏன் அல்என வரூஉம் ஏழும்**
**தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே.**

க ட த ற என்னும் நான்கு மெய்களுடன் கூடிய குற்றியலுகர ஈறாகிய கு டு து று எனபவற்றோடு, என் ஏன் அல் எனவரும் ஈறுகளையும் கூட்டி, ஆக இவ் ஏழு ஈற்றிடைச் சொற்களும் தன்மை ஒருமை வினைச் சொற்களாகும். உண்கு (உண்பேன்), உண்டு (உண்பேன்). வருது (வருவேன்). சேறு (செல்வேன்). காண்பென்-காண்பேன். காண்பல். முற்காலத்தில் யான் நோகு, யான் வருது. யான் சேறு என வழங்கியுள்ளனர்.

### 'செய்கு' எனும் வாய்பாட்டுவினை

**689 அவற்றுள்,**
**செய்குஎன் கிளவி வினையொடு முடியினும்**
**அவ்வியல் திரியாது என்மனார் புலவர்.**

முற்கூறிய ஏழு தன்மை ஒருமை வினைச்சொற்களுள் 'செய்கு' என்னும் வாய்பாட்டு வினைமுற்று பிறிதொரு வினைகொண்டு முடியினும் தான் முற்றுவினை என்ற இயல்பினின்றும் மாறுபடாது. காண்கு வந்தேன் (காண்பேன் வந்தேன் என இருவினைகளாய்த் தொடர்புபட நிற்கின்றன) வினையொடு முடிதலின் வினையெச்சமாகவேண்டும். அங்ஙனம் திரியாது ஈண்டு வினைமுற்றாகவே நிற்கிறது.

### உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று

**690 அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்**
**ஒருவர் மருங்கில் படர்க்கைச் சொல்லே.**

அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கு ஈற்று இடைச் சொற்களும் ஆண்பால் பெண்பால் ஆகிய உயர்திணை ஒருமைப் படர்க்கைச் சொற்களாம். வந்தனன், வந்தான், வந்தனள், வந்தாள்.

### உயர்திணைப் படர்க்கைப் பன்மை

**691 வினைமுற்று**
**அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்**
**பல்லோர் மருங்கில் படர்க்கைச் சொல்லே.**

அர் ஆர் ப என்னும் மூன்று ஈற்று இடைச் சொற்களும் உயர்திணைப் படர்க்கைப் பன்மைச் சொற்களாம். வந்தனர், வந்தார், வருப.

### மார் ஈற்று உயர்திணை வினைச்சொற்கள்

**692 மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை**
**காலக் கிளவியொடு முடியும் என்ப.**

# தொல்காப்பியம்

## மூலமும் கருத்துரையும்



தமிழண்ணல்